11.07.2017

தினமணி

**வெண்தாமரை**



வெண்தாமரையைக் கஷாயம் காய்ச்சிக் குடித்துவந்தால் கல்லீரல் வீக்கம் குணமாகும்.

வெண்தாமரை, நன்னாரி, வெட்டிவேர் இவை மூன்றையும் சம அளவு எடுத்து பொடி செய்து ஐந்து கிராம் அளவுக்கு எடுத்து சுடுநீரில் கலந்து குடித்து வந்தால் சிறுநீர் தாராளமாகப் பிரியும்.

வெண்தாமரையுடன் மஞ்சள்தூள் (சிறிதளவு) சேர்த்து கஷாயம் வைத்து இரவு படுக்கும் பொழுது குடித்து வந்தால் நன்றாகத் தூக்கம் வரும்.

வெண்தாமரை, சுக்கு, ஏலக்காய், ஒரிதழ் தாமரை அனைத்தையும் சம அளவு எடுத்துப் பொடி செய்து, தினமும் இரண்டு கிராம் பொடியை தினமும் காலை மாலை என இருவேளையும் சாப்பிட்டு வந்தால் இதய நோய்கள் அனைத்தும் குணமாகும்.

வெண்தாமரை, ஆவாரம் பூ இவை இரண்டையும் சம அளவு எடுத்துப் பொடி செய்து சாப்பிட்டு வந்தால் வெட்டைச்சூடு தணியும்.

வெண்தாமரைப்பூ,இலை,தண்டு, கிழங்கு ஆகியவற்றை தலா 100 கிராம் எடுத்து எடுத்து அதனை நன்றாக சாறு பிழிந்து முக்கால்கிலோ நல்லெண்ணையில் கலந்து அடுப்பில் கொதிக்க வைக்கவும். நன்றாக கொதித்த உடன் அதனை இறக்கி ஆற வைத்து காற்றுப்புகாத பாட்டிலில் அடைத்து வைக்கவும். தினமும் இதனை தலைக்கு தேய்த்து ஊற வைத்து குளித்துவர மங்கிய கண்பார்வை தெளிவுறும்.

வெண்தாமரைப்பூக்களைப் காயப்போட்டு பொடியாக்கி வைத்துக்கொள்ளவும். தினசரி 5 டீஸ்பூன் பொடியை ஒன்றரை டம்ளர் நீரில் போட்டு அடுப்பில் வைத்து சுண்டக் காய்ச்சவேண்டும். அதனை வடிகட்டி பால் சர்க்கரை சேர்த்து தினம் இரண்டு தடவை சாப்பிட்டு வந்தால் உயர் ரத்த அழுத்தம் சீராகும்.

KOVAI HERBAL CARE

கோவை பாலா,

இயற்கை வாழ்வியல் நல ஆலோசகர் மற்றும் Foot and Hand Reflexologist

Cell : 96557 58609

**வறுமையின் கோரப்பிடியால் ஏர் கலப்பையில் எருதுகளுக்கு பதில் மகள்களைப் பூட்டிய ஏழை விவசாயி!**



**சேஹோர்:** மத்தியப் பிரதேச மாநிலத்தில், எருதுகளை வாங்கவோ, வாடகைக்கு

எடுக்கவோ பணமில்லாத விவசாயி, தனது இளம் மகள்களையே ஏரில் பூட்டி நிலத்தை உழுத சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.
மத்தியப் பிரதேசம், சேஹோர் மாவட்டம் பசந்த்புர் பங்கிரி கிராமத்தில், சர்தார் பரேலா(45) என்ற விவசாயி, தனது இரண்டு மகள்களான ராதா (15), குந்தி (13) ஆகியோரை எருதுகளுக்கு பதில் ஏர் கலப்பையில் பூட்டி நிலத்தை உழுதார். இது தொடர்பான புகைப்படங்கள் இணையதளத்தில் வைரலாகப் பரவியது.

இது குறித்து சர்தார் பரேலா கூறுகையில், பணக் கஷ்டம் ஏற்பட்டதால் என் மகள்களை பள்ளிக்கு அனுப்ப முடியவில்லை. என்னுடன் விவசாயத்துக்கு உதவியாக இருந்தனர். நிலத்தை உழுவதற்கு எருதுகளை வாங்க பணமில்லாததால், வேறு வழியின்றிதான் ஏர் கலப்பையில் என் மகள்களை பூட்டி நிலத்தை உழுதேன் என்கிறார் கவலை தோய்ந்த முகத்தோடு.

இது குறித்து செய்திகள் பரவியதை அடுத்து, சர்தாரை தொடர்பு கொண்ட மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி, அரசு திட்டங்களின் கீழ் தேவையான உதவிகள் வழங்கப்படும் என்று உறுதி அளித்துள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பயிர்காப்பீடு திட்டம்: அந்தியூர் விவசாயிகளுக்கு அழைப்பு**

பயிர்காப்பீட்டு திட்டத்தில் பயன்பெற, அழைப்பு விடப்பட்டுள்ளது. அந்தியூர் வட்டாரத்தில், பிரதமர் பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இயற்கைச் சீற்றத்தால் பயிர் பாதிக்குபோது, உரிய இழப்பீடு பெறலாம். குறிப்பிட்ட பயிர்களுக்கு மட்டும் காப்பீடு செய்ய முடியும். அந்தியூர் வட்டார கிராமங்கள் அனைத்துக்கும், இது பொருந்தும். தங்கள் பகுதியில் எந்த

மாதிரியான பயிர்களுக்கு காப்பீடு செய்ய முடியும், பிரீமியம் தொகை எவ்வளவு, எங்கு செலுத்த வேண்டும்? தேவையான ஆவணங்கள் எது? போன்ற கூடுதல் தவல்களுக்கு, அந்தியூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகலாம்.

**நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் மழையின்றி கருகும் சோளப்பயிர்**

நாமகிரிப்பேட்டை பகுதியில், மழையின்றி சோளப்பயிர்கள் கருகி வருகின்றன. நாமகிரிப்பேட்டை, சேந்தமங்கலம் ஒன்றியத்தில், கடந்த ஆண்டு பருவமழை மற்ற இடங்களை விட மிகவும் குறைவாக பெய்தது. அதேபோல், இந்த ஆண்டு துவக்கத்திலும் மழையின் அளவு குறைவாகவே உள்ளது.

வழக்கமாக சித்திரை மாத பருவத்தில் கடலை, மரவள்ளி கிழங்கு பயிரிடும் விவசாயிகள், இதனால் ஏமாற்றம் அடைந்தனர். முதலீடு செலவு அதிகம் என்பதால், பலர் சித்திரை மாதத்தில் எவ்வித வேளாண் பணியும் செய்யாமல் தவிர்த்து வந்தனர். ஜூன் மாதத்தில் கொஞ்சம் மழை பெய்தது. இதை நம்பி தண்ணீர் இல்லாத விவசாயிகள், ஒரு ஏக்கருக்கு, 5,000 ரூபாய் வரை செலவு செய்து, மானாவாரி பயிராக சோளம் பயிரிட்டனர். ஆனால், கடந்த சில வாரங்களாக கன மழை பெய்யவில்லை. நல்ல வெயிலாக உள்ளது. மாலையில், மிக குறைந்த அளவே மழை பெய்து வருவதால், நாமகிரிப்பேட்டை, சேந்தமங்கலம் பகுதிகளில், சோளத்தட்டுகள் கருகி வருகின்றன. இன்னும், ஒரு வாரம் இதே நிலை நீடித்தால் பயிர்கள் அனைத்தும் கருகிவிடும் அபாயம் உள்ளது. இதனால், இப்பகுதி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**முட்டை விலை 380 காசாக நிர்ணயம்**

தமிழகம், கேரளாவில் முட்டை கொள்முதல் விலை, 380 காசாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, விற்பனை நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 400 காசுக்கு விற்பனை

செய்யப்பட்ட முட்டை விலை, 20 காசு குறைத்து, 380 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 422, ஐதராபாத், 350, விஜயவாடா, 360, பர்வாலா, 345, மும்பை, 414, மைசூரு, 400, பெங்களூரு, 395, கோல்கட்டா, 410, டில்லி, 360. பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில், ஒரு கிலோ, 77 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட முட்டைக்கோழி விலையில், எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. பல்லடத்தில் நடந்த உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில், 115 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த கறிக்கோழி விலையிலும், மாற்றம் செய்யப்படவில்லை.

## அரளி விளைச்சல் சரிவால் விலை அதிகரிப்பு: 'ஆடி'யில் மேலும், விலை உயர வாய்ப்பு

ஜூன் மாதம் கிலோ, 15 ரூபாய் வரை, அரளி பூ விலை சரிந்த நிலையில், ஜூலையில் விலை படிப்படியாக உயர்ந்து வருவதால், பனமரத்துப்பட்டி வட்டார விவசாயிகள் நிம்மதி அடைந்துள்ளனர்.

சேலம் மாவட்டம்,பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், கம்மாளப்பட்டி, தும்பல்பட்டி, ஜல்லூத்துப்பட்டி, சாமகுட்டப்பட்டி, வேடப்பட்டி, கோணமடுவு உள்ளிட்ட பகுதியில், 20 ஹெக்டேரில், அரளி நடவு செய்யப்பட்டுள்ளது. அங்கு, வெள்ளை, சிகப்பு ரோஸ்,மஞ்சள், சாதா வண்ணங்களில் அரளி பூக்கள் விளைகின்றன.அரளி மொக்கு பறிக்கும் தொழிலில், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு, ஒரு கிலோ பூ பறிக்க, 25 ரூபாய் கூலி வழங்குகின்றனர். தினமும், 20 டன் அரளி மொக்குகள் அறுவடை செய்யப்பட்டு, தமிழகம் மட்டும் இன்றி, கர்நாடகா , ஆந்திரா உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பபடுகிறது. கடந்த மாதத்தில் உற்பத்தி அதிகரித்தால், சேலத்தில், ஒரு கிலோ அரளி, 15 ரூபாய் முதல், 80 ரூபாய் வரை விற்பனையானது. பூ பறிக்கும் கூலி, சுங்கவரி,

போக்குவரத்து செலவுக்கு கூட விலை கிடைக்கவில்லை என, விவசாயிகள் விரக்தி அடைந்தனர். ஜூலையில் அரளி பூ விலை படிபடிப்பாக உயர்ந்து வருகிறது. நேற்று, முன்தினம் சேலம் மார்க்கெட்டில், ஒரு கிலோ சாதா அரளி, 120 ரூபாய், சிகப்பு, 140 ரூபாய், வெள்ளை, மஞ்சள் தலா, 120 ரூபாய் வீதம் விற்பனையானது.

இது குறித்து, சேலம், வா. உ. சி. மார்க்கெட் பூ வியாபாரி விக்னேஷ் கூறியதாவது: வைகாசியில், அரளி தேவை அதிகம் இருந்ததால், ஜூன், 15 வரை விற்பனை சுறு சுறுப்பாக இருந்தது. அதன் பின், ஆனியில், வி?ஷங்கள் இல்லாததால், விற்பனை குறைந்து, விலையில் சரிவு ஏற்பட்டது. தற்போது, மார்க்கெட்டிற்கு, பூ வரத்து குறைந்துவிட்டால், விலை அதிகரித்துள்ளது. ஆடியில் அரளி விலை, மேலும், உயர வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

இது குறித்து, அரளி விவசாயிகள் கூறியதாவது: மழை இல்லாததால், ஜல்லூத்துப்பட்டி, தும்பல்பட்டி, கோணமடுவு உள்ளிட்ட பகுதியில் அரளி செடிகள் காய்ந்து விட்டது. தண்ணீர் பாய்ச்சிய செடிகளில் இருந்த மொக்குகள், கடந்த வாரத்தில் பெய்த மழையினால், உதிர்ந்து விட்டதால், பூ உற்பத்தி குறைந்துவிட்டது. தற்போது, பெய்த மழையினால், காய்ந்த செடிகள் துளிர் விட்டு, வளர்ந்து மொக்கு வைத்தால், உற்பத்தி அதிகரித்து விடும். ஆடியில் கோவில் திருவிழாகள் வருவதால், அரளி பூ தேவை அதிகரித்து, அரளிக்கு நல்ல விலை கிடைக்கும். இவ்வாறு கூறினர்.

## மேட்டூர் அணை நீர்வரத்து 2,687 கனஅடியாக அதிகரிப்பு

நீர்வரத்து அதிகரித்ததால் கடந்த இரு நாளில் மேட்டூர் அணை நீர்மட்டம், ஒரு அடி உயர்ந்தது. கர்நாடகா அணைகளில் திறக்கப்பட்ட தண்ணீரின் ஒரு பகுதி, தொடர்ச்சியாக மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. இதனால், கடந்த, 8 ல் வினாடிக்கு, 37 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று முன்தினம், 1,912 கனஅடியாகவும், நேற்று, 2,687 கனஅடியாகவும்

அதிகரித்தது. நீர்வரத்து அதிகரித்ததால் கடந்த, 8 ல், 20.09 அடியாக இருந்த அணை நீர்மட்டம் நேற்று, 21.09 அடியாக உயர்ந்தது. குடிநீர் தேவைக்கு வினாடிக்கு, 500 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.

## இன்றைய வேளாண் செய்திகள்

மாவட்ட ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் ரூ.3 கோடிக்கு பருத்தி விற்பனை



திருவாரூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு பருத்தி அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது பருத்தி அறுவடை பணிகள் நடைபெற்று வருகின்றன. அறுவடை செய்த பருத்தியை விவசாயிகள் விற்பனை செய்து கொள்வதற்காக திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர், குடவாசல், வலங்கைமான் ஆகிய இடங்களில் ஒழுங்கு முறை விற்பனை கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு ஏலம் மூலமாக பருத்தி விற்பனை வாரந்தோறும் நடைபெற்று வருகிறது.

கடந்த ஆண்டு பருத்தி அறுவடை காலத்தில் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள

ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் மூலமாக ரூ.10 கோடியே 21 லட்சத்து 51 ஆயிரத்து 954 மதிப்பில் பருத்தி விற்பனை நடைபெற்றது. இந்த ஆண்டு இதுவரை திருவாரூர் மாவட்டத்தில் ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் மூலமாக 651 டன் பருத்தி விற்பனை செய்யப்பட்டு இருக்கிறது. இதன் மதிப்பு ரூ.2 கோடியே 97 லட்சத்து 58 ஆயிரத்து 612 ஆகும்.

தினகரன்

**மதுக்கரை வனத்தில் 5 ஆயிரம் விதை பந்துகள் வீச்சு**

கோவை குளங்கள் பாதுகாப்பு அமைப்பினர் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் அதிகளவிலான மரங்களை வளர்க்கும் வகையில் விதை பந்துகள் தயாரிக்கும் பணியில் கடந்த நான்கு வாரங்களாக ஈடுபட்டு வந்தனர். அதன்படி, வேம்பு, புங்கை, பூவரசு, அரச மரம் ஆகியவற்றின் விதைகள் சேகரிக்கப்பட்டது. இதில், இரண்டு பங்கு செம்மண், ஒரு பங்கு இயற்கை உரம் மற்றும் சாணி கலந்து உருண்டை பிடித்து விதை பந்துகள் தயாரிக்கப்பட்டது.

மொத்தம் 5 ஆயிரம் விதை பந்துகள் தயாரித்தனர். நேற்று கோவை மதுக்கரை வனச்சரகத்திற்குட்பட்ட வாளையார் அடுத்த வனத்தில் விதை பந்துகளை வீசினர். இவற்றின் வளர்ச்சி தொடர்பாக வனத்துறையினர் உதவியுடன் தொடர்ந்து கண்காணிக்கப்படும் என குளம் பாதுகாப்பு அமைப்பினர் தெரிவித்தனர்.

**படித்த இளைஞர்கள் விவசாயத்திற்கு வர வேண்டும்**

படித்த இளைஞர்கள் விவசாயத்திற்கு வரவேண்டும் என சகாயம் ஐஏஎஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

சீர்காழி விளந்திட சமுத்திரம் கடைக்கண் வினாயக நல்லூர் எஸ்டேட் திருமண அரங்கில் நலம் பாரம்பரிய விவசாய அறக்கட்டளை சார்பில் 2ம் ஆண்டு நெல் திருவிழா மற்றும் கண்காட்சி கருத்தரங்கம் நடைபெற்றது. முன்னதாக சீர்காழி

தமிழிசை மூவர் மணிமண்டபத்திலிருந்து மரபுக் கலைக்குழுவினர்களின் பாரம்பரிய நாட்டுபுற ஆடல், பாடலுடன் மாட்டுவண்டி ஊர்வலம் தொடங்கியது. ஊர்வலத்தை திரைப்பட இயக்குனர் எஸ்.பி.ஜெனநாதன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதை தொடர்ந்து கருத்தரங்கம் நடந்தது. கருத்தரங்கில் சகாயம் ஐஏஎஸ், விவசாயிகளுக்கு பாரம்பரிய நெல் ரகங்களையும் , இயற்கை விவசாயிகளுக்கு நம்மாழ்வார் விருதுகளையும் வழங்கினார். பின்னர் அவர் பேசுகையில், உழவர் குடி மக்கள், விவசாயிகளின் நலனை தாங்கி நிற்கும் நடத்தும். இது போன்று நிகழ்வுகளில் பேராவலுடன் கலந்துக்கொள்வேன். வேளாண்மைதான் ஒரு நாட்டின் வளத்திற்கு அடிதளம், ஆதாரம்.எனவே வேளாண்மை நலிந்துவிடாமல் பாதுகாக்க அரசு உட்பட மொத்த சமூகத்தி ற்கும் பொறுப்பு உள்ளது. குறிப்பாக படித்த இளைஞர்கள் அவர்கள் தங்கள் ஊர்களுக்கும்,வேர்களுக்கும் திரும்ப வேண்டும்.வேளாண்மையை இளைஞர்கள் தங்களது ஆதார தொழிலாக எடுத்துக் கொள்வேண்டும். ராசயன உரங்கள் இல்லாமல், பூச்சிக்கொள்ளி மருந்துகள் இல்லாமல் பாரம்பரிய மரபுப்படி வேளாண்மையை செய்யும் பொழுது அது நிச்சயமாக ஆரோக்கியமான உணவை அளிக்கிறார்கள். படித்த இளைஞர்கள் கிராமப்புறத்திற்கு வேளாண்மைக்கு வரவேண்டும். அவர்களால் வேளாண்மை லாபகரமான தொழிலாக செய்யமுடியும் என நம்புகிறேன் என்றார். முன்னதாக அறக்கட்டளை பொறுப்பாளர் கரு.முத்து வரவேற்றார். நாகை மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.கருணாகரன், வேளாண் இணை இயக்குனர் ஜெ.சேகர், முன்னோடி இயற்கை விவசாயி சுஜாதாமகேஸ்,பாதுகாப்பான உணவிற்கான கூட்டமைப்பு நிர்வாகி அனந்து, “ ஆகியோர் கருத்துரை வழங்கினர்.தொடர்ந்து மதிய அமர்விற்கு அறக்கட்டளை சட்ட ஆலோசகர் எஸ்.சுந்தரய்யா தலைமை வகித்தார். சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் பி.வி.பாரதி, தமிழக அனைத்து விவசாயிகள் சங்க தலைவர் பி.ஆர்.பாண்டியன், பூச்சி இயல் வல்லுனர் நீ.செல்வம் ஆகியோர் சிறப்புறையாற்றினர்.

பெரம்பலூர் பகுதியில் கூவி, கூவி விற்கப்படும் மஞ்சள் நிற பேரீச்சம் பழம்

பெரம்பலூரில் பகுதியில் கூவி, கூவி விற்பனை செய்யப்படும் மஞ்சள் நிற பேரீச்சம் பழம் கண்பார்வை வைட்டமின் 'ஏ' குறைவினால்தான் மங்கலாகும். இதை குணப்படுத்த பேரச்சம்பழமே சிறந்த மருந்தாகும். மாலைக்கண் நோயால் பாதிக்கப் பட்டவர்கள், பேரீச்சம்பழத்தை தேனுடன் கலந்து ஊறவைத்து சாப்பிட்டு வந்தால் உடலுக்கு தேவையான எல்லா சத்துக்களும் கிடைக்கும். பெண்களுக்கு அதிக கால்சியம் சத்தும், இரும்புச் சத்தும் தேவை. அதிக வேலைப்பளு, மன உளைச்சல், நீண்ட பட்டினி இருப்பவர்கள், அதிக வெப்பமுள்ள பகுதிகளில் வேலைசெய்பவர்கள் நரம்புத் தளர்ச்சியால் பாதிக்கப்படுவார்கள், பேரீச்சம்பழத்துடன் பாதாம் பருப்பு சேர்த்து பாலில்கலந்து கொதிக்க வைத்து சாப்பிட்டால் நரம்புத்தளர்ச்சி நீங்கி, ஞாபகசக்தி கூடும். அதோடு பொதுவா கவே பேரீச்சம் பழங்கள் இரும்புச்சத்து அதிகமுள்ளது. அத்தகைய பேரீச்சம் பழங்கள் வளைகுடா நாடுகளில்தான் பெருமளவு உற்பத்திசெய்யப்பட்டு வந்தன.

தற்போது இந்தியாவிலும் நவீன சாகுபடிமுறையில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. தற்போது வித்தியாசமாக மஞ்சள்நிற பேரீச்சம்பழங்கள் செங்காய்பதத்தில் வீதிவீதியாக கூவி, கூவி விற்கப்பட்டு வருகிறது. பெரம்பலூரில் புது பஸ்டாண்டு, பழைய பஸ்டாண்டு, பாலக்கரை, 4 ரோடு, சங்குப்பேட்டை பகுதிகளில் இந்த எல்லோ டேட்ஸ் எனப்படும் மஞ்சள் நிற பேரீச்சம் பழங்கள் பெருமளவு விற்கப்பட்டு வருகின்றன. கால் கிலோ ரூ50க்கு விற்கப்பட்டாலும் செங்காய்பதத்தில் இருப்பதால் அதனை நகரவாசிகள் பெரிதும் விரும்பி வாங்கி செல்கின்றனர். இவை மகா ராஷ்ட்ரா மாநிலத்தில் விளைவதாகக் கூறி பெரம்பலூரில் விற்கப்பட்டு வருகிறது.

**கீழ்பவானி வாய்க்காலில் உயிர் தண்ணீர் திறக்க விவசாயிகள் வலியுறுத்தல்**

பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால் பாசனத்துக்கு ஆண்டுதோறும் ஆகஸ்ட் 15 முதல் டிசம்பர் இறுதி வரையிலும், ஜனவரியில் இருந்து ஏப்ரல் 30ம் தேதி வரையிலும் தண்ணீர் திறக்கப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளாக கடும் வறட்சியின் காரணமாக ஒரு போகம் கூட நெல் சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கடந்த ஆண்டு செப்டம்பர்

மாதத்தில் மட்டும் 15 நாட்களுக்கு மட்டும் உயிர் தண்ணீர் திறக்கப்பட்டு பின்னர் நிறுத்தப்பட்டது. இந்த ஆண்டிலாவது நீர்பிடிப்பு பகுதிகளில் தென்மேற்கு பருவமழை கைகொடுத்து, பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வாய்ப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

அதன்படி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக 39 அடியாக குறைந்திருந்த பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 5 அடி உயர்ந்து 44 அடியாக உயர்ந்தது. ஓரளவு தண்ணீர் வந்த நிலையில் எதிர்பாராதவிதமாக காவிரி டெல்டா மாவட்டங்களில் கடும் குடிநீர் பஞ்சம் ஏற்பட்டுள்ளதால் தண்ணீர் திறக்க முடிவு செய்த பொதுப்பணித்துறையினர் 750 கனஅடி வீதம் ஆற்றின் வழியே தண்ணீர் திறந்து விட்டனர். இது மாவட்டத்திலுள்ள மற்ற விவசாயிகளை கொதிப்படைய செய்தது. குறிப்பாக கொடிவேரி மற்றும் காலிங்கராயன் பாசன விவசாயிகள் ஆற்றில் இறங்கி போராட்டம் நடத்தினர்.

இந்நிலையில் கீழ்பவானி பாசனப்பகுதியில் கடும் குடிநீர் பஞ்சம் தலை விரித்தாடுவதுடன், தென்னை மரங்கள் தொடர்ந்து அழிந்து வருவதால் அவற்றை காப்பாற்றுவதற்காக நீலகிரியில் உள்ள நீர்மின் அணைகளில் இருந்து 3 டிஎம்சி தண்ணீரை பெற்று 15 நாட்களுக்கு கீழ்பவானி வாய்க்காலில் உயிர் தண்ணீர் திறக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. இதுகுறித்து தமிழக விவசாயிகள் சங்கம் (கே.சி.ரத்தினசாமி பிரிவு) மாவட்ட செயலாளர் சுப்பு என்கிற முத்துசாமி கூறியதாவது: கடும் வறட்சியால் ஈரோடு மாவட்டம் முழுவதும் விவசாயிகள் கடும் துன்பத்திற்கு ஆளாகியுள்ளனர். கீழ்பவானி வாய்க்கால் பாசன பகுதியில் கடந்த ஆண்டு வெறும் 15 நாட்கள் மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டது.

அதன் பிறகு நீர்இருப்பு இல்லாததை காரணம் காட்டி தண்ணீர் விடவில்லை. கிட்டத்தட்ட 10 மாதங்களாக கீழ்பவானி பாசனப்பகுதியில் தண்ணீர் செல்லவில்லை. இதன் காரணமாக கால்நடைகளுக்கு குடிக்க கூட தண்ணீர் இல்லை. போர்வெல்களும், கிணறுகளும் வறண்டு விட்டதுடன், குடிநீர் பஞ்சமும் தலை விரித்தாடுகிறது. 200 கிலோ மீட்டர் நீளம் கொண்ட கீழ்பவானி வாய்க்காலில் 15 நாட்களுக்கு உயிர் தண்ணீர் திறந்தால் ஆயிரக்கணக்கான கிராமங்கள் குடிநீர் பெறுவதுடன், கால்நடைகளுக்கு குடிக்க தண்ணீரும்

கிடைக்கும். நீலகிரி மாவட்டத்தில் உள்ள நீர்மின் அணைகளில் 6 டிஎம்சி.,க்கும் மேல் நீர்இருப்பு உள்ளதால் அங்கிருந்து 3 டிஎம்சி நீரை பெற்று கீழ்பவானி வாய்க்காலில் உயிர் தண்ணீர் திறக்க பொதுப்பணித்துறையும், அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு சுப்பு தெரிவித்தார்.

**தேயிலையில் மருந்து தயாரிக்கும் திட்டம்**

நீலகிரி தேயிலையில் இருந்து மருந்து தயாரிக்க கைகாட்டி, மகாலிங்கா கூட்டுறவு ஆலைகளில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் உற்பத்தி பிரிவு துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயம் முக்கியத்தொழிலாக உள்ளது. இதை முன்னிட்டு மாவட்டத்தில் தொழில் வணிகத் துறையின் கீழ் 15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் இயங்கி வருகிறது. இதில் சுமார் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களிடம் இருந்து தினசரி கொள்முதல் செய்யப்படும் பசுந்தேயிலையை கொண்டு தொழிற்சாலைகளில் தினசரி தேயிலைதூள் உற்பத்தி செய்யப்படுகிறது. பெரும்பாலான தொழிற்சாலைகளில் சி.டி.சி ரக தேயிலைதூள் உற்பத்தியும் ஒரு சில தொழிற்சாலைகளில் சி.டி.சி ரகத்துடன் ஆர்த்தோடக்ஸ் தேயிலை தூளும் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்நிலையில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் தேயிலை தூளுடன் பசுந்தேயிலையில் மருந்து தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதுகுறித்து இண்ட்கோ சர்வ் சேர்மன் சிவக்குமார் கூறியதாவது: முதற்கட்டமாக கைகாட்டி மற்றும் மகாலிங்கா தேயிலை தொழிற்சாலைகளில் மருந்து தயாரிப்பதற்கான உற்பத்தி பிரிவு துவக்கப்பட உள்ளது. இதற்காக தமிழக அரசு ரூ.5 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. இதன் மூலம் விரைவில் இத்தொழிற்சாலைகளில் மதிப்பு கூட்டப்பட்ட மருந்து தயாரிப்பதற்கான உற்பத்தி பிரிவு துவக்கப்படும். இதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதை தொடர்ந்து மற்ற கூட்டுறவு தொழிற்சாலைகளிலும் படிப்படியாக மருந்து உற்பத்தி செய்யப்படும் என சிவக்குமார் தெரிவித்தார்.